# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 17/2022 | சாட்சி | வா.சா.4 |
| பெயர் | மணிகண்டன் | நாள் | 29.10.2024 |
| தகப்பனார் பெயர் | சுப்ரமணி | | |

**பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.4 ஐ குறுக்கு விசாரணை:-**

1) 1ம் வாதி என் பாட்டி என்றால், சரிதான். 2ம் வாதி என் தந்தை என்றால், சரிதான். நான் எங்கு வசித்து வருகிறேன் என்றால், க.எண்.5/357, மாட்டுகாரன் வளவு, சீரங்கனூர் என்ற முகவரியில் குடியிருக்கிறேன். நான் எந்த வருடம் பிறந்தேன் என்றால், 06.06.1999 ல் பிறந்தேன்.

2) என் பாட்டி, மற்றும் அப்பா ஆகியோர் கல் உடைக்கும் வேலை செய்து வந்தனர் என்றால், சரிதான். நான் பிறந்ததிலிருந்தே என் தந்தை ஆந்திர மாநிலம் சித்தூரில் கல் உடைக்கும் தொழில் செய்து வந்தார் என்றால், சரிதான். நான் ஆரம்ப பள்ளியை ஆந்திராவில் படித்தேன் என்றால், சரிதான். இவ்வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியும். தற்போது இவ்வழக்கு எந்தெந்த சொத்துக்களுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், ஒரே சொத்தின் மீது தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) மேற்படி வழக்கு சொத்து விவரத்தில் தாவா சொத்தில் வீடு குறிப்பிடப்பட்டுள்ளதா, அதில் மின் இணைப்பு ஏதேனும் காட்டப்பட்டுள்ளதா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை.(சாட்சி தற்போது மீண்டும் தாவா சொத்தில் வீடு உள்ளதாக வாதிகள் தங்களது வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக கூறுகிறார்.) தற்போது என்னிடம் காட்டப்படும் வழக்குரை சொத்து விவரத்தில் அவ்வாறு தாவா சொத்தில் வீடு குறித்தோ, மின் இணைப்பு குறித்தோ சொல்லப்பட்டுள்ளதா என்றால், இல்லை.

4) நான் சொல்வது தவறானது என்றாலும், தாவா சொத்தில் அவ்வாறு நான் சொல்வதுபோல் எவ்வித வீடும் இல்லை என்றாலும், சரியல்ல. என் பாட்டி சொத்தை தன் வாரிசுகளுக்கு வாய்மொழியாக பாகம் பிரித்து கொடுத்ததாக நான் சொல்லியுள்ள நிலையில், ஒரே சொத்தை என் தந்தைக்கும், என் சித்தப்பாக்களுக்கு பாகம் கொடுத்துவிட்டார். அவ்வாறு பாகம் கொடுத்துவிட்டதாக நான் சொல்லும் நிலையில் யாருக்கு என்னென்ன அளவுகளில் எந்தெந்த பாகத்தை கொடுத்துள்ளார் என எனக்கு தெரியுமா என்றால், அது குறித்து எனக்கு தெரியாது.

5) என் பாட்டிக்கு ஒரே சொத்து என நான் சொல்லும் நிலையில், தற்போது என் பாட்டி அவரது வாரிசுகளுக்கு வாய்மொழி பாகம் பிரித்து கொடுத்துவிட்டதாக சொல்லும் நிலையில், தற்போது என் பாட்டிக்கு என சொத்து எதுவும் கிடையாது என்றால், சரியல்ல. சொத்து என் பாட்டியுடையது தான். தற்போது தாவா சொத்தில் யாரும் வசிக்கவில்லை என்றால், சரியல்ல. என் பாட்டியும், என் சித்தப்பாவும் குடியிருக்கின்றனர்.

6) எந்த வருடத்தில் என் பாட்டி வாய்மொழி பாகம் பிரித்து கொடுத்தார் என்றால், குறிப்பாக எனக்கு வருடம் தெரியாது. அசல் தாவாவில் அவ்வாறு சொத்துக்கள் வாய்மொழி பாகம் பிரிக்கப்பட்டதாக ஏதேனும் சொல்லப்பட்டுள்ளதா என எனக்கு தெரியுமா என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. மேற்படி சொத்தை என் பாட்டி எப்போது, யாரிடம் கிரயம் வாங்கினார் என எனக்கு தெரியாது என்றால், சரியல்ல. கடந்த 20.02.2006 ம் தேதியில் சித்தயன் என்பவரிடமிருந்து என் பாட்டி கிரயம் வாங்கினார். மேற்படி கிரயம் ஏற்பட்ட சமயத்தில் நடந்த சங்கதிகள் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால், சரிதான்.

7) தாவா சொத்தை கிரயம் பெற்றதாக சொல்லும் சமயத்தில் அளந்து கியரம் கொடுக்கப்பட்டதா என எனக்கு நேரடியாக தெரியாது என்றால், சரிதான். தாவா சொத்திற்கு பட்டா கோரி விண்ணப்பித்ததாக சொல்லும் நிலையில் வாதிகள் தனித்தனியாக விண்ணப்பித்தார்களா அல்லது ஒன்றாக விண்ணப்பிததார்களா

என்றால், ஒன்றாகத்தான் விண்ணப்பித்தார்கள். தாவா சொத்தை யார் வந்து, எந்த தேதியில் அளந்தார்கள் என்றால், 03.12.2021ம் தேதியில் அளக்க வந்தார்கள். யார் அளக்க வந்தார்கள் என எனக்கு பெயர் சரியாக தெரியவில்லை.

8) அவ்வாறு நிலத்தை அளக்க வந்தவர்களை அளக்க கூடாது என பிரதிவாதிகள் பிரச்சனை செய்ததாக நான் சொல்லும் நிலையில், அது தொடர்பாக சம்மந்தப்பட்ட அதிகாரிகள் காவல் நிலையத்தில் ஏதேனும் புகார் அளித்தனரா என்றால், அவர்கள் அவ்வாறு புகார் அளிக்கவில்லை. ஆனால், அதற்கு முன் நாங்களே போலீசில் பாதுகாப்பு கேட்டிருந்தோம்.

(பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.4 ஐ குறுக்கு விசாரணை விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/—திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.